## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தேசிய சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

தேசிய சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தேசிய சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தேசிய சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தேசிய சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு வருடத்தில் காலாவதியாகும் ரூபா 10,000,000 ஆன நிலையான வைப்பு முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்படாமல் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு செயற்பாடுகள் மற்றும் கையிலுள்ள காசு என்பன அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிலையான வைப்பு முதலீட்டை சரியாகக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 25 ஆம் பிரிவின் பிரகாரம் பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் ஊடாக மீளாய்வாண்டில் கைப்பற்றப்பட்ட கெப் வண்டியின் நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் எந்தவொரு அடிப்படையும் இன்றி கெப் வண்டியின் பெறுமதி ரூபா 6,000,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த கெப் வண்டிக்காக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 588,493 கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் | அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் வழங்கப்படுமிடத்து விநியோகித்தல் கட்டளையின் பெறுமதி குறிப்பிடப்படாதிருந்தமையால் காப்புறுதிப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | கெப் வண்டியின் நியாயமான பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கும், அதற்குரிய பெறுமானத் தேய்வையும் சரியாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறைத்து காண்பிக்கப்பட்டது. | | |
| (இ) பண பரிமாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் ஊடாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற கெப் வண்டியின் பெறுமதியாக இனங்காணப்பட்ட ரூபா 6,000,000 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியான மதிப்பீட்டுப் பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் சரியான பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது இரண்டு மோட்டார் வாகனங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 706,655 ஆன மீண்டெழும் வடிவிலான செலவினம் மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதி மற்றும் ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் முறையே அதிகரித்தும், குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக கடந்த ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 165,447 காப்புறுதி தவணைப் பணம் முன்னைய ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாகவும், முன்னைய ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 81,555 காகிதாதிகள் செலவினம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் | 2024 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

காரணமாகவும் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 83,892 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | தளபாட உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் கணக்கின் மீதி | 5,272,129 | 5,195,459 | 76,670 | 2024 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துப் பதிவேட்டை சரியாக தயாரித்து அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இடர் கடன் மீதி | 3,520,934 | 3,692,947 | 172,013 | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பதிவேட்டை சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியான பட்டோலைகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்கம் நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (அ), (ஆ) | நிதி அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் பணம் முதலீடு செய்ய வேண்டிய போதிலும், தேசிய சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா | 2024.06.24 ஆம் திகதியில் முதிர்ச்சியடைகின்ற இந்த நிலையான வைப்புக்களை மீண்டும் முதலீடு செய்யாமல் நிறுவனத்தின் மீண்டெழும் மற்றும் மூலதனச் | நிதிச் சட்டத்தின் பிரகாரம் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதி முதலீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 10,000,000 பணம் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பபட்டிருக்க வில்லை. | செலவினங்களை தீர்ப்பதற்காக பயன்படுத்துவதற்கும் அதில் சேமிப்பு இருக்குமாயின் ஆண்டின் இறுதியின் போது திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்கும் நிருவாக சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2024 பெப்ரவரி 05 ஆம் திகதிய இலக்கம் F/FR/05/NHRDC/General/03/20 என்ற அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரின் கடிதம். | தேசிய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் 2023 ஆம் ஆண்டிற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த நிதியத்தில் இருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்த ரூபா 3,589,644 தொகையை விரைவாக ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்குமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த சேமிப்பு பணம் 2024 ஆம் ஆண்டின் செலவினத்தை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | பெப்ரவரி மாதம் முதல் இதுவரை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் மூலம் கட்டுநிதி விடுவிப்பதற்கு அமைச்சின் மூலம் பரிந்துரை செய்யப்படாதிருந்தமையால் நிறுவனத்தின் சம்பளக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய ஏனைய செலவினங்கள் 2023.12.31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்ட தொகையில் இருந்து செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்ட தொகையை விரைவாக ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதிய இலக்கம் 05/2020 என்ற நிதியமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை. | ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை விற்றுத்தீர்ப்பதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு | வான் வண்டியின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கி எதிர்காலத்தில் பழுதுபார்ப்பதற்கு | ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு |

| | | |
|---|---|---|
| எடுப்பதற்கோ விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் தேசிய சபையின் வான் வண்டி ஒன்று 2023 சனவரி 16 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2024 மே 10 வரையிலும் அந்த வாகனத்தை நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்மானிக்கப்பட்டுள் ளது. | எடுப்பதற்கோ விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,370,102 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 550,915 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 819,187 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் மின்சார செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வு செலவினங்கள் அதகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு 25 வருடங்கள் கடந்திருந்த போதும் 1997 இன் 18 ஆம் இலக்க மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சபை தாபிக்கும் அடிப்படை நோக்கத்தில் ஒன்றான தேசிய மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் கொள்கை ஒன்று தயாரிக்கும் பணிகளை பூர்த்தி செய்து பெறுபேறுகளை அடைந்து | மனிதவள அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பாக அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் ஸ்தாபித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமான வழிகளை எடுத்து நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை அடைந்து கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது. | | |
| (ஆ) | நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவும் வகையில் மனித வள அபிவிருத்திற்குரிய பல்வேறு துறைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவு வங்கியொன்றை போணிச் செல்லும் சட்டத்தின் 16(2)இ மற்றும் 16(2)ஊ பிரிவுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய தரவு வங்கியொன்று 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அந்த தகவல்கள் நாளதுவரையாக்குவதற்காக வலுவான பொறி முறையொன்று தேவையாக இருந்தமையால் சபைக்கு அத்தியவசியமான பிரிவொன்றான இதற்காக பதவியணியில் சில புதிய பதவிகளை ஸ்தாபித்துக் கொள்ளும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தில் காண்பிக்கப்படுகின்ற பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில் அடிப்படையாகக் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்குரிய கொள்கையை வடிவமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல் தொடர்பான தேசிய சபையின் கூட்டம் கடந்த ஆண்டில் 05 தடவைகளும், மீளாய்வாண்டில் 02 தடவைகளும் நடாத்தப்பட்டிருந்த போதிலும், இந்த கூட்டங்களின் நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்லல் தொடர்பாக 10(5) பிரிவின் பிரகாரம் பணி நடைமுறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | கூட்டங்களை நடாத்துதல் தொடர்பாகவும், அந்தக் கூட்டங்களை நடாத்திச் செல்லல் தொடர்பாகவும் பின்பற்றப்பட வேண்டிய பணி நடைமுறைகளை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | கூட்டங்களின் செயற்பாடுகளை முறையாகப் பேணிச் செல்வது தொடர்பான பணி நடைமுறையொன்று விரைவாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஏப்ரல் 27 ஆம் திகதி முதல் தேசிய சபையில் வெற்றிடமாக இருந்த பணிப்பாளர் பதவிக்காக புதிய உத்தியோகத்தரை சேர்த்துக்கொள்வதற்கு இந்த அறிக்கைத் திகதி | தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் தற்போது சேவையாற்றுகின்ற நிலையத்தில் இருந்து அவர் கேட்டு விலகும் போது ஏற்பட்டிருந்த பிரச்சினையின் காரணமாக | முறையான ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் தவறியிருந்தது. | வேலையை கையேற்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது என. | |
| (உ) | தேசிய சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் போது பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் அத்தியாவசிய பணியாக இருந்தமையால் அதற்காக முன்னுரிமை வழங்குவதற்காக உதவி பணிப்பாளர் (ஆராய்ச்சி) உத்தியோகத்தர் கட்டாயமாக சபையில் இருக்க வேண்டியிருந்த போதிலும், 2020 ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் கணக்காய்வு திகதியான 2024 மே 15 ஆம் திகதி வரையிலும் அந்த பதவிக்காக உள்ளபடியான உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு முடியாதிருந்ததுடன், 2021 ஆகஸ்ட் 03 ஆம் திகதி முதல் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | நிறுவனக் கட்டமைப்பைத் திருத்துவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தேவையான திருத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | அத்தியவசியமான ஆட்சேர்த்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் தேசிய சபைக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம் ஒன்று 2024 மே 10 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த PB-0286 கெப் வண்டி எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சபையின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற கையேற்கப்படாத கெப் வண்டியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |